<u>**சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.**</u>

**அ.வ எண்: 159/2023 ஜெயா(வாசா1) தேதி:19.08.2025**

**வாசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் இந்தவழக்கில் 3ம்வாதி என்றால் சரிதான். அசல்வழக்கை பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளோம். தாவாசொத்துக்கள் எங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது ஆகும். தாவாசொத்துக்கள் ஆழ்வார்சாமி நாயக்கர் மற்றும் அவரது முன்னோர்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது ஆகும். தாவாசொத்துக்களை ஆழ்வார்சாமி நாயக்கர் ஆண்டு அனுபவம் செய்து பராமரித்து வந்தார் என்றால் சரிதான். வாசாஆ.1 ஆவணம் ஆழ்வார்சாமி நாயக்கர் பெயரில் உள்ள பட்டா ஆவணம் என்றால் சரிதான். ஆழ்வார்சாமி நாயக்கர் எந்தஆண்டு இறந்தார் என்றால் நான் சிறுவயது இருக்கும்போது அவர்இறந்துவிட்டதால் இறந்தவருடம் எனக்கு தெரியவில்லை. ஆழ்வார்சாமி நாயக்கர் இறப்பிற்கு பின் அவரது மனைவி கிருஷ்ணம்மாள், மகன் ராமமூர்த்தி, மகள் ஜெயா என்ற ஜெயலட்சுமி கூட்டாக அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். ஆழ்வார்சாமி நாயக்கர் இறப்பிற்கு முன்பு தாவாசொத்துக்களை பொறுத்து எவ்விதஆவணமும் எழுதிவைக்கவில்லை. ஆழ்வார்சாமி நாயக்கர் இறப்பிற்கு பின் அவரது மனைவி கிருஷ்ணம்மாள்தான் தாவாசொத்துக்களை பராமரித்து வந்தார் என்றால் சரிதான். இந்து வாரிசுரிமை சட்டப்படி ஆழ்வார்சாமி நாயக்கர் இறப்பிற்கு பின் மனைவி என்ற முறையில் அவருக்கு உரிமை ஏற்பட்டு அவர் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். எனக்கு 2008ம்வருடம் திருமணம் நடந்தது. எனது திருமணத்திற்கு பின் நான் கணவருடன் சென்னை, தாம்பரத்தில் குடியேறிவிட்டேன் என்றால் சரிதான். எனது திருமணத்தின்போது எனது தந்தை ராமமூர்த்தி உயிருடன் இருந்தாரா என்றால் இல்லை. அவர் அதற்கு முன்பே 2004ம்வருடம் இறந்துவிட்டார். எனது திருமணத்தை எனது சகோதரர் விஜயகுமார் தான் செலவுசெய்து நடத்திவைத்தார் என்றால் எனதுதந்தை இறப்பிற்கு பின் வந்த பணிபலன்களை கொண்டுதான் 1ம் பிரதிவாதி எனது திருமணத்தை செய்து வைத்தார். எனது திருமணத்தின்போது எனது தந்தை வழிபாட்டி கிருஷ்ணம்மாள்

உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். நான் திருமணம்ஆகி சென்றவுடன் எனது பாட்டி கிருஷ்ணம்மாளை எனது சகோதரர் 1ம் பிரதிவாதிதான் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. எனது திருமணத்திற்கு பின்பும் எனது பாட்டி கிருஷ்ணம்மாளை நான் அடிக்கடி வந்து சந்திப்பேன் என்றால் சரிதான். எனது பாட்டி கிருஷ்ணம்மாள் எனது அண்ணன் பெயரில் உயில் எழுதிவைத்த விவரம் 2020ம்வருடம் தான் எனக்கு தெரியவந்தது. எனது பாட்டி கிருஷ்ணம்மாள் எழுதிவைத்த உயில் ஆவணத்தில் சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த உயில் ஆவணத்தை எதற்காக ரத்துசெய்ய கோருகிறேன் என்றால் அனைவருக்கும் சொத்தில் பாகம் உள்ளது. எனக்கு என்ன பாகம் உள்ளதோ அதே பாகம்தான் என் சகோதரருக்கும் உள்ளது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.